# கொழும்புப் பல்கலைக்கழகம் - கல்விப்பீடம்

## பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமாப் பரீட்சை (முழு நேரம்)

## முதலாம் பருவம் 2016/2017

### CU 507–விசேட கற்பித்தல் முறைகள்

நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

- நீங்கள் கற்ற இரண்டு பாடங்களை தெரிவு செய்க.
- அவை ஒவ்வொன்றிலுமுள்ள முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்ளுக்குமாக எல்லாமாக ஆறு (06) வினாக்களுக்கு விடை தருக.
- விடைத்தாளின் வலது பக்க மேல் மூலையில் தெரிவு செய்த பாடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
- விடைத்தாள்களை வேறு வேறாக கட்டி மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்.

### தமிழ்மொழிகற்பித்தல் முறைகள்

### பகுதி I

1. i. இலங்கையின் கல்வி இலக்குகளில் தமிழ் மொழிப்பாடத்துக்குப் பொருத்தமான மூன்று தேர்ச்சிகளை காரணங்களுடன் சுருக்கமாகத் தருக.
   ii. தமிழ் கற்பித்தலில் கையாளப்பட்டுவந்த மரபுவழி முறைகளைத் தருக.
   iii. இலக்கணம் கற்பிப்பதன் நோக்கங்கள் யாவை?
   iv. தமிழ் மொழிப்பாட வகுப்பறையில் ஆசிரியர் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள் யாவை?
   v. மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்த தமிழ்மொழிப்பாட ஆசிரியர் கையாளக்கூடிய வழிமுறைகளைத் தருக.

(5x4= 20 புள்ளிகள்)

### பகுதி II

2. இலங்கைக்கு வகுக்கப்பட்ட கல்வித் தேர்ச்சிகள் தமிழ்மொழிப் பாடநூலில் பிரதிபலிப்பதை ஆராய்க (ஒரு பாடநூலை மட்டும் கருத்தில் கொள்க)

(15 புள்ளிகள்)

3. இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர் கருத்திற் கொள்ளவேண்டிய அம்சங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(15புள்ளிகள்)

4. மாணவர்களின் தமிழ்மொழித் தேர்ச்சியை கணிப்பிடும்போது ஆசிரியர் அவதானிக்கவேண்டிய கணிப்பீட்டு அம்சங்கள் யாவை?

(15 புள்ளிகள்)

5. நீங்கள் கற்ற கல்வி உளவியல் அறிவு தமிழ் கற்பிக்கும் பணிக்கு எவ்வாறு உதவும் என்பதை ஆராய்க.

(15 புள்ளிகள்)

## குடியுரிமைக்கல்வி கற்பித்தல் முறைகள்

1. i. குடியுரிமைக் கல்விப் பாடநூலில் காணப்படும் குறைபாடுகள் நான்கு குறிப்பிடுக.

   ii. ஒருங்கிணைப்பு என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.

   iii. குடியுரிமைப்பாட அலகொன்றினை கற்பிக்கும்போது ஆசிரியர் ஒருவர் கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சங்கள் நான்கு குறிப்பிடுக.

   iv. குடியுரிமைப்பாட கலைத்திட்டத்தை தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் யாவை?

   v. குடியுரிமைப்பாட அலகொன்றுக்கு பாடக்குறிப்பொன்றினை எழுதும்போது பின்பற்றப்படவேண்டிய அணுகுமுறையை சுருக்கமாக விளக்குக.

(5x4= 20 புள்ளிகள்)

2. குடியுரிமைக் கல்வி ஆசிரியர் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய விசேட இயல்புகள் யாவையென விளக்குக.

(15 புள்ளிகள்)

3. ஏதாவது ஒரு வகுப்புக்கு குழு முறையில் கற்பிப்பதற்கான பாடக்குறிப்பை படிமுறையில் எழுதுக.

(15 புள்ளிகள்)

4. குடியுரிமைக்கல்வி அறையின் முக்கியத்துவம் யாதென விளக்கி குடியுரிமை கல்வி அறையொன்றில் வைத்திருக்கவேண்டிய பொருட்கள் பற்றி குறிப்பிடுக.

(15 புள்ளிகள்)

5. குடியுரிமைக்கல்வி பாடத்துடன் தொடர்புபட்ட இரண்டு பல்தேர்வு வினாக்களை தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

## புவியியல் கற்பித்தல் முறைகள்

1. i. புவியியல் பாடத்தினைக் கற்பித்தற் பொருட்டு மாணவர்களுக்கு முன்வைக்கக்கூடிய செயற்றிட்டத்தில் இடம்பெற வேண்டிய பண்புகள் 5 கூறுக.

(4 புள்ளிகள்)

ii. புவியியல் பாடம் கற்பித்தலின்பொருட்டு கதைகூறல் முறையைப் பயன்படுத்தும்போது பாடத்தில் இரசனையை அதிகரிப்பதற்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள் ஐந்து தருக.

(4 புள்ளிகள்)

iii. நிகழ்காலத்தில் புவியியல் கற்பித்தலின் நோக்கங்களில் சூழல் பற்றிய உணர்வை உருவாக்குவதற்கு அடிப்படையாக உள்ள நோக்கங்கள் இரண்டு தருக.

(4 புள்ளிகள்)

iv. "புவியியலானது ஒருவரில் ஏதாவது ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புகிறது" இக்கூற்றினை உதாரணங்கள் தந்து விளக்குக.

(4 புள்ளிகள்)

v. புவியியல் கற்பித்தலின் பொருட்டு களப்பயணத்தைப் பயன்படுத்தும் விதத்தை உதாரணங்கள் தந்து சுருக்கமாக விளக்குக.

(4 புள்ளிகள்)

2. i. புவியிலியல் அவதானம் முக்கியமானது அத்தகையதொரு விடயத்தைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான கற்பித்தல் முறையைத் தெரிவு செய்வதற்கு நீங்கள் விரும்பிய விடயமொன்றின் அடிப்படையில் படிமுறையாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. நீங்கள் தெரிவுசெய்த கற்பித்தல் முறையின் நன்மை மற்றும் தீமைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(5 புள்ளிகள்)

3. i. புவியியல் கற்றலின் முக்கியத்துவத்தை அதன் உள்ளடக்கத்திலிருந்து உதாரணங்கள் தந்து விளக்குக.

(8 புள்ளிகள்)

ii. புவியியல் கற்பிக்கும் ஆசிரியர் என்றவகையில் நீங்கள் விருத்திசெய்ய வேண்டிய இயல்புகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(7 புள்ளிகள்)

4. i. கற்பித்தல் சாதனம் என்றவகையில் தேசப்படப் புத்தகம், சுவர்படம் மற்றும் பூகோளம் என்பவற்றைப் பயன்படுத்தும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. புவியியல் கற்பித்தலின் பொருட்டு தனிப்பட்ட ஆய்வுகூடம் ஒன்றை வைத்திருப்பதால் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர் என்றவகையில் அதனை எவ்வாறு பார்ப்பீர் என விளக்குக.

(8 புள்ளிகள்)

5. i. படம் கற்றல் பற்றிய அடிப்படையறிவு அற்ற மாணவர்களுக்குப் படங்களைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான செயல்முறையை விபரமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. புவிக் கோளத்தைப்பற்றி கற்பிப்பதற்கு புவி மாதிரியைப் பயன்படுத்தும் முறையை உதாரணம் தந்து விளக்குக.

(5 புள்ளிகள்)

## <u>விஞ்ஞானம் கற்பித்தல் முறை</u>

**முதலாம் வினா உட்பட எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

(1) i. விஞ்ஞானத்தில் செயன்முறைத் திறன்கள் இரண்டு பெயரிடுக.

(2 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள எண்ணக்கரு சோடிகளுள் காணப்படும் வேறுபாடுகளை சுருக்கமாக அறிமுகஞ்செய்க.

a. விரிசிந்தனையும் குவிசிந்தனையும்

b. எடுகோளும் கருதுகோளும்

c. சாராமாறியும் சார்ந்தமாறியும்

d. அவதானமும் அனுமானமும் (8 புள்ளிகள்)

iii. விஞ்ஞானபாடம் கற்றல் சந்தர்ப்பமொன்றில் மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட வேண்டிய அறிகையாட்சி, உளவியக்க ஆட்சி மற்றும் எழுச்சி ஆட்சிக்குட்பட்ட கற்றல் நோக்கங்கள் ஒவ்வொன்று முறையே குறித்த பாடமொன்றினை அடிப்படையாகக் கொண்டு எழுதிக்காட்டுக.

(3 புள்ளிகள்)

iv. விஞ்ஞானத்தில் செய்முறை சந்தர்ப்பமொன்றில் மாணவர்களிடையே விருத்தி செய்யப்படக்கூடிய கருவிகளைக் கையாளும் திறன்கள் இரண்டு கூறுக.

(2 புள்ளிகள்)

v. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் விஞ்ஞானம் கற்பிக்கையில் பயன்படுத்தக்கூடிய கற்பித்தல் முறைகளை முறையே எழுதுக.

a. சக்தி மூலங்களும் அவற்றைபற்றி அறிந்து கொள்வதால் கிடைக்கும் நன்மைகளும்

b. காந்த முனைவுகளில் ஒத்த முனைவுகளின் தள்ளுகையும் எதிர் முனைவுகளின் கவர்ச்சியும்

c. ஒளித்தொகுப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

(3 புள்ளிகள்)

vi. விஞ்ஞான பாடம் கற்றலின் விளைவுகளை மதிப்பீடு மேற்கொள்வதற்கென இரண்டு புறவயமான வினாக்களை அமைத்துக் காட்டுக. (2 புள்ளிகள்)

(2) i. "விஞ்ஞானம்" பற்றிய E. A. Peel இன் கருத்துகளை எடுத்துக் காட்டுக.

(6 புள்ளிகள்)

ii. நீங்கள் விரும்பிய வகுப்பொன்றில் விஞ்ஞானம் கற்பித்தலில் மேற்படி வினா இல 2 (i) இல் குறிப்பிட்ட விஞ்ஞானத்தின் இயல்புகளைப் பற்றி விமர்சனரீதியாக ஆராய்க. (9 புள்ளிகள்)

(3) i. விஞ்ஞானரீதியான படிமுறையிலுள்ள படிகளை உதாரணங்களின் உதவியுடன் எடுத்துக்காட்டுக. (6 புள்ளிகள்)

ii. விஞ்ஞான மனப்பாங்கு (scientific attitude) மற்றும் விஞ்ஞானம் தொடர்பான மனப்பாங்கு (attitude towards science) ஆகியவற்றை விஞ்ஞானரீதியான எழுத்தறிவை (scientific literacy) வளர்ப்பதற்கு பயன்படுமாற்றை விளக்குக.

(9 புள்ளிகள்)

(4) i. விஞ்ஞாபாடம் கற்பிக்கையில் செய்துகாட்டல் (demonstration) முறையைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டுக. (6 புள்ளிகள்)

ii. நீங்கள் விரும்பிய வகுப்பொன்றைத் தெரிவுசெய்து செய்துகாட்டுதல் முறையைப் பயன்படுத்தி விஞ்ஞான பாடமொன்றைக் கற்பிப்பதற்கான திட்டத்தினை எழுதிக்காட்டுக. (9 புள்ளிகள்)

(5) i. பின்வருவனவற்றுள் மூன்றுக்கு சிறுகுறிப்பெழுதுக.

a. விஞ்ஞானத்தின் செயன்முறைத் திறன்களை விருத்திசெய்தல்

b. விஞ்ஞானம் கற்பித்தலில் விஞ்ஞானபாட ஆசிரியரின் செயற்பாடுகள்

c. விஞ்ஞானம் கற்றலில் வழிகாட்டப்பட்ட கண்டறிமுறையின் பயன்பாடுகள்

d. விஞ்ஞானத்தின் பிரயோகத் திறன்களை மதிப்பீடு செய்தல்

(5 x 3 = 15 புள்ளிகள்)

## <u>கணிதம் கற்பித்தல் முறைகள்</u>

(1) பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் கீழே தரப்பட்டுள்ள எண்ணக்கருக்கள் இரண்டினை விளக்கி அவை ஒவ்வொன்றும் மாணவர்களின் கற்றலில் காட்டும் செல்வாக்கினை விபரிக்குக.

a. கருத்துரீதியான எண்ணக்கரு

b. விரிசிந்தனை

c. கணித எண்ணக்கருவின் படிமுறையாக்கம்

d. கணிதத்தின் முறைசார் ஒழுங்கமைப்பு

(10 x 2 = 20 புள்ளிகள்)

(2) i. பாடசாலைக்காலத்தில் அமுல்படுத்தப்படும் பூரண கலைத்திட்டத்தில் கணிதபாடக் கலைத்திட்டத்துக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (7 புள்ளிகள்)

ii. கணிதபாட கலைத்திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துகையில் பெற்றுக்கொண்ட அனுபவங்களால் மாணவர்களுக்கு கிடைக்கும் அறிவாற்றல் பயன்கள் பற்றி ஆராய்க. (8 புள்ளிகள்)

(3) பின்வருவனவற்றுள் மூன்றுக்கு சிறுகுறிப்பொழுதுக.

a. பியாஜேயின் வகுப்பறை திட்டமிடலில் எதிர்பார்க்கப்படும் ஆளிடைவினைத் தொடர்பு

b. கணிதபாட வகுப்பொன்றில் பிரதிபலித்தல் சிந்தனையை வளர்த்தல்

c. புதிய எண்ணக்கருக்களை அறிமுகஞ்செய்வதில் Skemp இன் கண்டுபிடிப்புகள்

d. கணிதபாடம் தொடர்பான மாணவர்களின் சுயஎண்ணக்கரு விருத்தி

(5 x 3 = 15 புள்ளிகள்)

(4) i. கணிதத்தின் விசேட இயல்புகளை ஆராய்கின்ற மூன்று அணுகுமுறைகளைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. "மாணவர்களின் கணிதபாட அடைவானது பொரும்பாலும் ஏனைய பாட அடைவுகளை விடவும் பரந்தளவில் மாறல்களைக் கொண்டுள்ளது". இக் கூற்றினை ஆராய்க. (5 புள்ளிகள்)

iii. மாணவர்களின் கணிதபாட அடைவில் வேறுபாடுகள் காணப்படுவதற்கு காரணமாக அமைந்த காரணிகளைபற்றி கருத்துரைக்குக.

(7 புள்ளிகள்)

(5) i. கணிதபாடம் கற்றலில் குழுமுறைக் கற்பித்தலின் பயன்பாடுகளை விளக்குக.

(5 புள்ளிகள்)

ii. விரிவான கட்டுரைவகைச் சோதனைக்கு பதிலாக பலவுள்தெரிவு அல்லது அமைப்பாக்கல் கட்டுரைவகை அல்லது சுருக்கவிடை வகை சோதனைகளைப் பயன்படுத்துவதால் மாணவர்களுக்கு கிடைக்கும் பிரதிகூலங்களை விளக்குக.

(5 புள்ளிகள்)

iii. விரிவான கட்டுரைவகைச் சோதனையைப் பயன்படுத்தி கணிதபாட அடைவுகளை மதிப்பீடு செய்கையில் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுச் செயன்முறையை விருத்திசெய்வதில் புருணரின் கண்டுபிடிப்புகள் பயன்படுமாற்றை விளக்குக.

(5 புள்ளிகள்)